கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

அவ.எண். 231/15

2019 ம் ஆண்டு 09.07.2019 பிவாசா.3

சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி , பி.எ.பிஎல்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | நடராஜன் | தொழில் |
| த/பெ | சுப்பையா | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் 6ம் பிரதிவாதி ஆவேன். வழக்கு விசாரணையில் எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதையே எனது தரப்பில் சாட்சியமாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். அத்துடன் 3.6.1987 தேதியிட்ட ஒரு சுப்பராயன் என்பவர் எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ.2. (அசல் ஆவணம் வங்கி அடமான கடனில் உள்ளது. ) 12.1.1989 ம் தேதி மேற்சொன்ன கிரைய பத்திரத்தின் பிழை திருத்த ஆவணம் பிவாசாஆ.3. நான் குடியிருக்கும் வீட்டிற்கு குடிநீர் கட்டணம் செலுத்திய ரசீதுகள் (எண்ணிக்கை 4) அது பிவாசாஆ.4 வரிசை . எனது வீட்டிற்கு வரி செலுத்திய ரசீதுகள் (எண்ணிக்கை 7) பிவாசாஆ.5 வரிசை. என் வீட்டிற்கான மின்கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 6) பிவாசாஆ.6 வரிசை. மேற்படி சாட்சியத்தையும் சான்றாவணங்களையும் ஏற்றுக் கொண்டு மனுவில் கேட்ட பரிகாரம் கிடைக்க வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக் கொண்டதன் பேரில் ஒத்திவைக்கப்பட்டது.